# DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING
## PERUNDURAI, ERODE DISTRICT
## NEWS LETTER

**2019 - 2020**

volume - I




# செய்திமடல்
## 2019 - 2020

## இயற்றமிழ் இனிமை

# உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

நாம் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாக இருக்க வேண்டும். ஆம் ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களை உயர்த்திக் கொள்வதன் மூலம் இருக்கின்ற இடத்தில் இருந்து எழ முடியும்! வெற்றி காண முடியும்! சாதிக்க முடியும்.தம்பி! "நீ உன்னை வளர்த்துக் கொள். நற்குணங்களால் வலிமையான பழக்கங்களால், தன்னம்பிக்கைத் தரும் எண்ணங்களால் உன்னை உயர்த்திக்கொள்.நீ உயர்ந்தாயானால் இந்த நாடு உயர்கிறது." என்கிறார் டாக்டர் M.S உதயமூர்த்தி.பூரணமான மனிதராக எவரும் வளர்வது, மாறுவது அசாத்தியமான சமாச்சாரமே என்றாலும், நம்முடைய குறைகளைத் தவிர்த்து, குறைத்து, நிறைகளை வளர்த்து துளித்துளியாக மனதால் உயர்ந்து கொண்டே போவது எவருக்கும் சாத்தியமே. உயரம், பருமன், அழகு, இளமை, இத்தியாதிகளின் வரம்புக்கு உட்பட்டது. மனிதனின் உடம்பு மட்டுமே! மனதின் வளர்ச்சிக்கு உயரம் இல்லை, அழகு உச்சவரம்பு இல்லை, இளமைக்கு முதுமை இல்லை, அதை மறக்கக் கூடாது என்கிறார் எழுத்தாளர் சிவசங்கரி.

உயர்ந்த எண்ணங்களே மகத்தான காரியங்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் உணரவேண்டும். அத்தகு உயர்ந்த சிந்தனைகளை நமக்குத் தரவல்லவை உயரிய புத்தகங்களே. புத்தகங்களைப் பற்றி கூறும்பொழுது பிரபஞ்சன் கூறுவார், புத்தகங்கள் - என் உயிரினும் மேலாக நேசித்த புத்தகங்கள் என் கவலைகளில் பங்கு கொண்டு, எனக்கு ஆறுதல் சொல்லி, என் அறிவை விசாலித்து, என்னைக் கிளர்ச்சி அடையச்செய்து, பொங்கவிட்டு, வடியவிட்டு, என்னை இளகச்செய்து, அனைத்திற்கும் சிகரமாக, பக்குவப்படுத்திய புத்தகங்கள்" ஆனால் உயரிய விஷயங்களை நாம் புத்தகங்களிடமிருந்து மாத்திரம் அல்ல எவரிடமிருந்து வேண்டுமானாலும் கற்கலாம்.எனவே நல்லனயாவற்றையும், பிறரிடமிருந்து பிறரிடமிருந்து நாம் கற்போமாக. ஆனால், சிந்தனைகளையும் கனவுகளையும் சோம்பேறித் தனத்தின் புகலிடமாக ஆக்கக்கூடாது. எண்ணங்களை உரிய முறையில் செயலாக்குதல் மிகவும் அவசியம். காலம் பார்த்து காரியம் செய்தால், பூமியையே விலைக்கு வாங்கலாம். "ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்" - என்கிறார் வள்ளுவர்.

மகாத்மாகாந்தியடிகள், விவேகானந்தர், அன்னை தெரசா போன்றோரின் ஈடு இணையற்ற மனித நேயத்தை நாம் அனைவரும் அறிவோம். அத்தகைய மாமனிதர்களின் உயரிய சிந்தனைகளை நாம் உணர முற்படவேண்டும். அவர்களின் அளவிற்கு நம்மால் உணர முடியாமல் போனால் கூட, நம் அளவிற்கு, நம்மால் எவ்வளவு இயலுமோ அவற்றை இவ்வுலகிற்கு நாம் கட்டாயம் செய்தாக வேண்டும்.கவிக்கோ அப்துல் ரஹ்மான், தன் கல்லின்

காயம் என்ற கவிதையில் ஒரு மனிதனின் சமாதியில் எழுதியிருக்கும் பெயரைப் பார்த்துக் கேட்கிறார்.

இந்தக்கல் மட்டும்தான் உன்னை நினைக்கின்றதா?

எந்த இதயத்திலாவது உன்னை எழுதிக்கொண்டதில்லையா?

இந்த மண்ணில் மட்டும்தான் அடக்கமாயிருக்கிறாயா?

எந்த புத்தகத்திலும் நீ பொருளடக்கம் ஆனதில்லையா?

உன் மூச்சுக்கள் மரணத்தை நோக்கி எடுத்து வைத்த அடிகள் மட்டும் தானா?

நீ பிறருக்கு கவசமாக இருந்ததில்லையா?

நியாயம்தானே! பெறுதற்கரிய மானிடப்பிறவி எடுத்தும் அந்த மகத்துவத்தை உணராமல், நம் சந்ததியினருக்கும் உணர வைக்காமல் மறைத்து விட்டோமேயானால் நமக்கும், மிருகத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? இம்மாதிரியான சிந்தனைச் செம்மல்களை, செயல் வீரர்களை, உதாரணமாகக் கொண்டு, நல்ல, உயரிய சிந்தனைகளால் நாமும் உயர்ந்து, நம் நாட்டையும் உயர்விப்போமாக!

**ஆர்.மைதிலி**

**முதுநிலை**

**விரிவுரையாளர்**

# தமிழ் இலக்கியத்தில் இயற்கைச்சாரல்

**தமிழ் இலக்கியத்தில்:**

**"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்**
**மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்**
**தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ**
**பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்"**

என்று திருவள்ளுவமாலை வெண்பா ஒன்று அழகாக தமிழின் மறைநூலை பறைசாற்றுகிறது. தமிழ் மொழியும் தமிழ்நாடும் மூன்று என்ற எண் தமிழர்களின் வாழ்வில் மிக நெருங்கிய தொடர்புடன் பின்னிப் பிணைந்துள்ளது. தமிழ்நாட்டின் அரசுகள் மூன்று, தமிழ்நாட்டுப் பிரிவுகள் மூன்று, இயல், இசை, நாடகம் என்றும் முத்தமிழும் மூன்று, சிறந்த பெயர் பெற்ற மலைகள் மூன்று, தலைநகரங்கள் மூன்று, வள்ளுவன் வகுத்துக் கூறும் பால்களும் மூன்று, ஏன்? நம் சங்கத் தமிழ் கூட முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று. உலகில் எந்தவொரு மொழியும் சங்கம் வைத்து வளரவில்லை. முச்சங்கம் வைத்து தமிழும் தமிழக வளமும் பாதுகாத்தப் பெருமை நம்முடைய முன்னோடிகளையே சாரும்.

மனித வாழ்வு என்பது எப்போதும் பிறரையும் பிற வாழ்வியல் பொருள்களையும் ஒருங்கே அமைந்திருப்பது இவ்வுலகில் இயற்கையும் தமிழ்ச் சமுதாயமும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது. ஒன்றில்லாமல் ஒன்றில்லை என்பதை யாவரும் உணரவேண்டும். இவ்வுலகில் நீரின் அவசியத்தை நன்கு உணர்ந்ததாலே முப்பால் என்றும், தமிழர் வேதம் என்றும் சொல்லக்கூடிய திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. இயற்கையெனும் வான்சிறப்பில் மழைப்பொழிவை போற்றும் வண்ணம் கடவுளுக்கு நிகராக, திருக்குளில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்ததாக "வான்சிறப்பு" என்ற ஒன்றை வைத்தார் வள்ளுவப் பெருந்தகை. வான்சிறப்பு 10 குறட்பாக்களையும் என்றென்றும் நாம் எண்ணுதல் வேண்டும்.

**"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலை காண்புஅரிது" (குறள்.16)**

என்று இயற்கை மழையை வள்ளுவப் பெருந்தகை வரவேற்றார். வான்மழையை பாவேந்தர் பாரதிதாசன் அமிழ்தம் என்றே கூறுவார்.

## இயற்கை அரண் காவலர்கள்:

நம் முன்னோர்கள் இயற்கையைப் போற்றினார்கள், வணங்கினார்கள். நம்முடைய தமிழ் இலக்கியங்கள் என்றும் இயற்கையுடன் சேர்ந்தே இருப்பதாகும். பிரிக்க முடியாதது. ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், பதினெண்கீழ்க்கணக்கு, பதினெண்மேல்கணக்கு என்று எல்லா தமிழ் இலக்கியங்களுக்கும் இருமருங்கும் கரைகளாக அமைந்திருப்பது இயற்கையாகும்.

சேரநாடு கோவம்சத்தில் வந்தவர் சேரன் செங்குட்டுவனின் இளவல் இளங்கோவடிகள் ஆவார். அடிகளின் சிலம்புத்துவக்கமே

1. **"திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்,**
**கொங்கு அலர்தார் சென்னிகுளிர் வெண்குடைபோன்றுஇவ்**
**அம் கண்உலகு அளித்தலான்"**

2. **ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோல் பொன்கோட்டு**
**மேரு வலம் திரிதலான்.**

3. **மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர்வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்று தான் சுரத்தலான்.**

4. **பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்**
**வீங்குநீர்வேலி உலகிற்கு அவன்குலத்தோடு**
**ஓங்கிப் பரந்து ஒழுகலான்."**

சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் சிலம்பின் முதற்காண்டம் புகார்காண்டத்தில் மங்கல வாழ்த்துப் பாடலிலே,

1. திங்கள்
2. ஞாயிறு
3. மாமழை
4. பூம்புகார்

என்று நிலம், நீர், வான் எனும் தெய்வங்களை வணங்கியும் போற்றியும் பனுவல் செய்தார் என்றால், இயற்கையைப் பாதுகாப்பது எந்த அளவு இன்றியமையாதது என்பதை என்றென்றும் நாம் உணர வேண்டும்.

முன்னோர்கள் இயற்கையை உணர்ந்தனர், அதன் அவசியத்தை உணர்ந்தனர். "நாம் இன்றி இயற்கையுண்டு. இயற்கையில்லாமல் நாம் இல்லை". மானுடன் இயற்கையிலே இரண்டறக் கலந்தான். ஆகவே,

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"என்று வள்ளலார் உள்ளம் உருகினார்.**

அன்றைய தமிழன் நிலப்பகுதிகளை வைத்து, "வாழ்வியல்" அமைத்தான்.

அ. முதற்பொருள்

ஆ. உரிப்பொருள்
இ. கருப்பொருள் என மூன்றை உருவாக்கினான்.

**அ. முதற்பொருளிலே**

1) சிறுபொழுது (ஒருநாள்)
2) பெரும்பொழுது (ஓர் ஆண்டு) என்று இரு கூறுகளாகப் பிரித்தான்.

**ஆ. உரிப்பொருளாக**

1) நிலம்
2) இடம்
3) ஒழுக்கம்

எனும் அமைப்பை உருவாக்கினான்.

| வ. எண் | **நிலம்** | **இடம்** | **ஒழுக்கம்** |
|---|---|---|---|
| 1 | குறிஞ்சி | மலை | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 2 | முல்லை | காடு | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 3 | மருதம் | வயல் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 4 | நெய்தல் | கடல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| 5 | பாலை | மணல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**இ. கருப்பொருள்**

1. தெய்வம்
2. மக்கள்
3. தாழ்ந்தோர்
4. உணவு
5. விலங்கு
6. பூ
7. மரம்
8. பறவை
9. ஊர்
10. நீர்
11. பறை
12. பண்
13. தொழில்
14. யாழ்

என்று ஐவகை நிலங்களுக்கும் வகைப்பாடு செய்து மக்கள் மகிழ்ச்சியில் திளைத்து இருந்தனர். ஒன்றோடொன்று மனித வாழ்வில் மொழி, சமுதாயம், பண்பாடு மூன்றும் ஒருங்கே வளர்ந்தது எனவும் உறுதியாகக் கூறலாம்.

## பதினெண் சித்தர்கள் (இயற்கைக் காவலர்கள்)

1. அகத்தியர் வைத்தியம் பிற்கால அகத்தியர்
2. திருமூலர் திருமந்திரம் காலத்தால் முந்தியவர்
3. சிவவாக்கியர்
4. அகப்பேய்ச்சித்தர்

5. அழுகுணிச்சித்தர்
6. குதம்பைச்சித்தர்
7. இடைக்காட்டுச்சித்தர்
8. கடுவெளிச்சித்தர்
9. சட்டைமுனி
10. உரோமமுனி
11. கொங்கணச்சித்தர்
12. போகர்
13. பட்டினத்தார்
14. பாம்பாட்டிச்சித்தர்
15. மச்சமுனி
16. யூகிமுனி
17. புலிப்பாணி
18. பத்திரகிரியார்




இவர்கள் அனைவரும் இயற்கையையும் பாதுகாத்து, தமிழ் மொழியையும் பாதுகாத்தவர்கள். இயற்கையின் பால் மிகுதியான பற்றுக் கொண்டவர்கள் தமிழ்ப் புலவர்கள் என்பது உண்மை.

### தமிழகத்தின் செல்வங்கள்

அ) தாவரங்கள்
ஆ) விலங்குகள்
இ) பறவைகள்

இம்மூவகை உயிரினங்கள் இலக்கியங்களோடு மிகுதியான தொடர்பு கொண்டுள்ளன. சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்ட தாவர வகைகள் சில இக்காலத்தில் காணப்படவில்லை. விலங்குகளிலும், பறவைகளிலும் பல மறைந்து விட்டன அல்லது சில வேறு பெயரால் குறிக்கப்படுகின்றன.

### அ) தாவரங்கள்:

சங்க இலக்கியங்களில் இருநூறுக்கு மேற்பட்ட செடி, கொடிகள் கூறப்பட்டுள்ளன. இயல்புநவிற்சியாக சங்கப் புலவர்கள் உள்ளதை உள்ளவாறே எடுத்தியம்பினர். செடி, கொடிகளின் இயற்கையை, உன்னதத்தை உணர அவர்தம் குறிப்புகள் பெரிதும் பயன் படுகின்றன. பாலை என்பது மரமா? கொடியா? என்ற ஐயம் பன்னாட்களாக இருந்தது. சங்க இலக்கியத்தில் ஒரு பாடலில் பாலையின் தனித்த உருவம் பெற்றுள்ள காயைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. இச்செய்தியே பாலை மரம் என நாமறியப் பயன்படுகின்றது. சங்கப் புலவர்களின் நுண்மாண் நுழைபுலன் இத்தகைய இடங்களால் சிறப்புப் பெறுகின்றது.

## 1. குறிஞ்சி:



குறிஞ்சி என்னும் செடி மிகுதியாக வளர்வதால் மலை நிலப்பகுதி "குறிஞ்சி" எனப் பட்டது. கடல் மட்டத்திற்கு மேல் 6000 அடிக்கு மேல் வளரும் இயல்புள்ளது. குறிஞ்சிப்பூ தனித்தன்மை வாய்ந்தது. செடி நூலாசிரியர்கள் இதனை "ஸ்ட்ரொபிளான்த்தெஸ்" (Strobilanthes) என்னும் இனத்தைச் சேர்ந்ததாகக் குறிக்கின்றனர். பன்னிரண்டாண்டுகட்கு ஒருமுறை பூக்கும் இம்மலர் மலைச்சாரல் முழுவதையும் போர்வை போல் மூடி விடுவதால், பழைய நூற்புலவர்கள்

**"கருங்கோல் குறிஞ்சியடுக்கம்" (புறம்.374)**

எனப் பாடி வைத்தனர். அவ்வாறு பூக்கும்போது, தேனீக்கள் குடம், குடமாக இவற்றின் தேனைச் சேகரித்துக் கொள்கின்றன. இதனை

**"கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந். 3)**

என்னும் பாடலால் அறியலாம். இதன் காம்புகள் கரியவை் வலிமையற்றவை.

**"கருங்கோல் குறிஞ்சி மதனில் வான்பூ"**

என்றும் நற்றிணைப் பாடல் இதனை உணர்த்தும். இதன் தேனைத் "தனிப்பூத்தேன்" என வழங்குவர்.வழங்குவர்

## 2. மருதம்:



சங்க நூல்களில் பல இடங்களிலும் பயின்று வருவது, மருதமரம். இம்மரத்தின் பெயரால் வயல் சூழ்ந்த நீர்வளப்பகுதி "மருதநிலம்" என்றே வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் கருமருது, வெள்ளைமருது, கலிமருது. பூமருது எனப் பல மருத மரங்கள் உண்டு. இவற்றுள் "பூமருது" என வழங்கப்படும் மருதமே சங்க நூல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

**"செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்"**

என வரும் குறுந்தொகை அடி இதனை அறிவிக்கின்றது.

**"அறலவிர் வார்மணல் அகவியாற்றடை கரைத்**
**துறையணி மருது தொகல் கொளவோங்கி" - அகம்.97**

**"மருதுயர்ந்தோங்கிய விரி பூந்துறை" - ஐங்குறு.33**

**"வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை" - சிலம்பு-7-2**

என்னும் இலக்கியவரிகள் இதயத்தை வருடுகிறது.

## 3. முல்லை:



மலர் சிறியது, மிக வெண்மையானது நறுமணம் மிக்கது.

**"இரு விசேர் மருங்கில் பூத்தமுல்லை**
**வெருகு சிரித்தன்ன பசுவீ" - குறுந்.220**

**"சிறுவீ முல்லை கொம்பில் தாஅய்" - குறுந்.348**

முல்லை மொக்கு காட்டுப் பூனையின் பற்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. முல்லை மலரை, அதன் தூய்மையும், நறுமணமும் கருதி கற்புக்கு அறிகுறியாகக் கொண்டனர்.

**"குல்லையம் புறவில் குவிமுகை அவிழ்ந்த**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" -**

என்பது சிறுபாணாற்றுப் படை. (29-30) ஐரோப்பிய இலக்கியங்களிலும் தூய வெள்ளிய "லில்லி (Lily) மலர்" மகளிரின் கற்புக்கு ஒப்பிடப்பட்டிருப்பது ஈண்டு கருதத் தக்கது.

## 4. நெய்தல்:

கடலோரங்களில் உப்பங்கழிகளில் நெய்தல் செடி வளர்வதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன.

**"இருங்கழி நெய்தல்" - குறுந்.336**



நெய்தல் செடியின் இலை "பாசடை" எனப்படுகிறது. நெய்தல் மலர் மகளிர் கண் போன்ற உருவத்தில் உள்ளது.

**"இருங்கழி மலர்ந்தன கண்போல் நெய்தல்" -**

அகநானூற்றில் நெய்தல் இலை சிறிய யானைக்குட்டியின் காது போன்றது. நீலமணி போல் நிறமுடையதாதலின் நெய்தல் பூ "மணிப்பூ" எனக் கூறப்படுகிறது. இச்செடியானது நூலில் Nymphac Stellatta என வழங்குகின்றனர்.

## 5. பாலை:

வறட்சியான நிலத்தைப் "பாலை" என்பர். பாலை மரங்கள் வளர்ந்திருப்பதால் இந்நிலம் பாலை எனப் பெயர் பெற்றது.**"பாலை நின்ற பாலை நெடுவழி"** - பாலையின் அடிமரம் வெண்மையாத் தோன்றும். ஆதலால் இது "தந்தப்பாலை" எனவும் அழைப்பர். ஆங்கிலத்தில் Ivory wood என்பர்.

**"கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை"** என்றும் அடியால் உணரலாம்.



பாலை மலர் கொத்தாகவும், வெண்மையாகவும் இருக்கும். மலையாளத்திலும் தெலுங்கிலும் இதனை "பாலா" என வழங்குவர்.

தமிழ் இலக்கியங்களில் மலர்கள் தனி முத்திரையைப் பதித்துள்ளன. காதல் இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. அவை:

1) காந்தள்
2) நரந்தம்
3) முருக்கு
4) கவிர்
5) இலவு
6) கொன்றை
7) பாதிரி
8) புன்னை
9) முசுண்டை
10) அடும்பு
11) இலுப்பைணன
12) தாழை
13) குறுக்கத்தி

### ஆ) விலங்குகள்:

ஒவ்வொரு நாட்டின் நிலவளத்திற்கும் தட்ப வெப்பச் சூழ்நிலைகளுக்கேற்பவும் ஆங்காங்கு வாழும் உயிரினங்கள் வேறுபடுகின்றன. தமிழகத்தில் காணப்படும் விலங்குகளுள் இலக்கியங்களில் சுட்டப்படும் சில விலங்குகள்:



1. யானை
2. புலி
3. எண்கு (கரடி)
4. மான்
5. செந்நாய்
6. கேழல் (காட்டுப்பன்றி)
7. நரி
8. வெருகு (காட்டுப்பூனை)
9. வெருடை (மலையாடு)
10. ஆமா (காட்டுப்பசு)
11. குரங்கினம்
12. முளவுமா (முள்ளம்பன்றி)

**இ) பறவைகள்:**

புலவர்கள் கள்ளமற்ற வாழ்வினர். பெற்றது கொண்டு சுற்றம் அருந்தித் தாமும் உண்டு மகிழும் தூய உள்ளம் உடையவர்கள். வள்ளல்களை நாடிச்சென்று பரிசில் பெற்று வாழும் இயல்ப

ினர். இதனை

**"பழுமரம் உள்ளிய பறவை போல"** - புறம்.370. அடியால் உணரலாம்.

இலக்கியத்தில் புள்ளினங்கள்:



1. நாரை
2. அன்னம்
3. மயில்
4. குயில்
5. வானம்பாடி
6. கிளி
7. புறா
8. அன்றில்
9. காக்கை

காக்கையினிடம் மனிதன் கற்க வேண்டிய பண்புகள்.

**"காலை எழுதல் காணாமலே புணர்தல்**
**மாலைகுளித்து மனைபுகுதல் - சாலவே**
**உற்றாரோ டுண்ணல், உறவாடல் இவ்வைந்தும்**
**கற்றாயோ காக்கைக் குணம்"**

என்னே அருமையான வாழ்வியல் கருத்துகள்.

**"பாலுக்குச் சீனியைப் போல் - பசுந்தமிழ்ப்**
**பாடலுக் கின்னிசை போல்**
**சோலைக்குப் பைங்கிளியே - உனது**
**துணையும் இனிதே அம்மா" - கவிமணி தேசியவிநாயகம்.**

**"அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்**
**வஞ்சி யனையார் மணிநடையும் விஞ்சியது**
**காணப் பிடித்தது காண்" - நளவெண்பா**

என அன்னத்திற்கு நளன் ஆறுதல் கூறியதாக புகழேந்தி புகல்கின்றார்.

## இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்திற்கு நான்கு அடிப்படைத் தூண்கள்:

**1. அறநெறி (Ethical):**

அழிப்பதற்கோ காப்பதற்கோ - ஓர் உயிரினத்தைப் பூண்டோடு அழிக்க அல்லது அழிவிலிருந்து காக்க முடிவு செய்யும் சுதந்திரம் நமக்கு உண்டு. ஆனால் அவைகள் நமது இயற்கைப் பாரம்பரியச் செல்வங்கள் என்ற நம்பிக்கையோடு பாதுகாத்து அவைகளை நமது சந்ததியினரிடம் ஒப்படைப்பது நமது கடமையாகும்.

**2. இரசனை (Aesthetic):**

வண்ணப்பறவைகளையும், விலங்குகளையும், பூத்துக் குலுங்கும் தாவரங்களையும் கண்டு களிக்கின்றோம். புத்துணர்வு பெறுகின்றோம். அவைகள் உயிர் அழகுகள். அழியாத ஆத்ம மகிழ்ச்சி தருபவை. இவைகளை பாதுகாப்போம்.

**3. விஞ்ஞானம் (Scientific):**

ஒவ்வொரு மனிதனின் சொந்த வாழ்வு, இயற்கையைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. அனைத்து உயிரினங்களுக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத உறவுமுறைகளுக்குள்ளே அவன் ஓர் அங்கமாவான். இயற்கை மனித அறிவிற்கு ஒரு புதையல் சுரங்கமாகும். வன விலங்குகள், உயிரியல் விஞ்ஞானத்தின் ஒரு பகுதி மூலப்பொருளாகும். அதை அழிப்பது அறிவீனம்.

**4. பொருளாதாரம்:**

இயற்கை வளம், விலங்கினம், பறவைகள் இவைகளெல்லாம் இயற்கை ஆதாரங்களாகும். நாம் நிரந்தரமாக உணவு மூலப்பொருள்கள் பெற வழியாகும். அதை அடியோடு சுரண்டி அழித்துவிடாத வகையில் கையாள வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தனக்குரிய பங்கினை உணர்ந்து சிறு சிறு செயல்களைச் செய்ய வேண்டும். செய்ய முடியும். சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக மாநில, மத்திய அரசுகள் தாமாகவும், உலக நாடுகளுடன் சேர்ந்தும் மாபெரும் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன.

**முடிவுரை:**

நன்னிலை சுற்றுச் சூழலுக்கு இருந்தால் நமக்கும்நன்னிலை் சுற்றுச் சூழல் நைந்து போய்விட்டால் மானிட வாழ்வும் நைந்து போகும் என்பதே உண்மை என்றார் பாவேந்தர். "சுற்றுச் சூழலே மானிட நல்வாழ்விற்காகன அடித்தளம்" வைட்/பீல்ட் எனும் அறிஞர் "மனித இனம் கூர்மதியுடைய, தகவமைப்பு திறனுடைய ஒரு சிற்றினம் நமக்குப் பூமியின் உயிரினங்களை அழிக்கும் சக்தி உண்டு. உயிரைப் பாதுகாக்கும் அறிவும் உண்டு. இப்பூமியை நாம் கட்டமைக்கிறோம். சற்றே சிரமம் என்றாலும் அது நன்றே செய்வது நமக்கு நன்று. நம் தேவைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவோம், பேராசையை மட்டுப்படுத்துவோம். இவ் வுலகில் உயிரானது நீடித்து நிலைக்க வழி செய்யும் வாழ்க்கை முறைக்கு நாம் திரும்புவோம்". நல்ல சுற்றுச்சூழல், அறிவு பெற்ற குடிமக்களை உருவாக்கும் என்பதை முன்னோர்களும், ஆன்றோர்களும், முனிவர்களும், சித்தர்களும், மன்னர்களும் நன்கு உணர்ந்து இருந்தனர். ஆகவே, நாமும் நம்முடைய புவியை மேம்படுத்துவதற்கும்,

பாதுகாப்பதற்கும் வேண்டிய முடிவுகளை எடுப்பதற்கும் தயார்படுத்துதல் இன்றைக்கு அவசியமாகும்.

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"  - (குறள்.737)**

**குறிப்புகள்:**


1) தமிழ்ப்பேழை - டாக்டர். ஆறு.அழகப்பன் - பக்.217 - 252.
2) இந்தியச் சுற்றுச்சூழல் இதில் நமது பங்கு - ஜோரா. செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு. பக்.05, 08, 09, 10.
3) சுற்றுச்சூழல் கல்வி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு பாடத்திட்டம்.



**மு. சேகரன்**
**விரிவுரையாளர்**



**Published By : DIET, Perundurai, Erode**
**Editor : Mr. N. Lakshminarasimhan, Principal**

**Co – Editors :**
**Mrs. R. Mythili, SeniorLecturer**
**Mrs. P.Gowri, Lecturer**